"பெரியார் அறிவுலகம் கோவைக்கு புதிய அடையாளமாக நிலைக்கும் !" என ஆசிரியர் கி. வீரமணி வாழ்த்து !

சமூகப் பிணி களையப் பெரியாரியத்தைத் தொடர்ந்து பரப்புவோம்!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு !

சென்னை, அக் 22-

திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் உடல்நலம் குன்றியுள்ள செய்தி அறிந்து நேற்று முன்தினம் கழகத் தலைவர் மு. க.ஸ்டாலின் அவர்கள், ஆசிரியர் இல்லம் சென்று பார்த்து நலம் விசாரித்தார்.

இச்சந்திப்பை அடுத்து வலைதளப் பதிவிட்ட கழகத்தலைவர் அவர்கள், "சமூகப் பிணி களையப் பெரியாரியத்தைத் தொடர்ந்து பரப்புவோம்!" என்று குறிப்பிட்டுள்ளார்.

கழகத் தலைவர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

ஆசிரியர் அய்யா அவர்களுக்கு உடல்நிலை சரியில்லை என்று கேள்வியுற்றதும் நேரில் சந்தித்து நலம் விசாரித்தேன். அடிக்கடி தொலைதூரப் பயணங்கள் மேற்கொள்வதையும், ஓய்வில்லாமல் உழைப்பதையும் குறைத்துக் கொள்ள வேண்டுமென உரிமையோடு அவரிடம் கேட்டுக்கொண்டேன். "ஆக்ஸ்போர்டில் தந்தை பெரியாரின் படத்தைத் திறந்து வைத்து உலக அளவில் பெரியாரியத்தை நிலைநிறுத்தியது போன்றே, திராவிட மாடல் அரசால் உருவாக்கப்பட்டு தற்போது திறந்து வைக்கப்பட்டுள்ள பெரியார் அறிவுலகம் கோவைக்கே புதிய அடையாளமாக நிலைக்கும்" என நிறைவோடு வாழ்த்தி வழியனுப்பி வைத்தார். சமூகப் பிணி களையப் பெரியாரியத்தைத் தொடர்ந்து பரப்புவோம்!

இவ்வாறு அப்பதிவில் கழகத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



பா.ஜ.க.வின் கார்பன் காப்பியாக செயல்படாமல் உடனே விடுதலை செய்வீர்

நா.த.க. வேட்பாளர் கைது; கடைந்தெடுத்த பாசிசம்!

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, அக்.22-

தாராபுரம் இடைத்தேர்தலில் போட்டியிட்ட நாம் தமிழர் கட்சி வேட்பாளர் கார்த்திகாவை கைது செய்திருப்பது கடைந்தெடுத்த பாசிசம் என்றும், 'ரீல்ஸ்' முதல மைச்சர், பா.ஜ.க.வின் கார்பன் காபியாக செயல்படாமல், அவரை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது கண்டனப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவரது சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

தாராபுரம் இடைத்தேர்தலில் போட்டியிட்ட நாம் தமிழர் கட்சியின் வேட்பாளர் சகோதரி கார்த்திகாவை இந்த CIRCUS அரசாங்கம் கைது செய்திருப்பதை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

தேர்தல் நேரத்தில் பதியப்பட்ட வழக்கின் அடிப்படையில், அரசியல் பழிவாங்கலோடும் த.வெ.க.வினரின் போதைப்பொருள் கடத்தல் செய்திகளை திசைத்திருப்பவும் இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



அரசியலில் விமர்சனங்களும் ஜனநாயக ரீதியான போராட்டங்களும் தவிர்க்க முடியாதவை. அதற்காக எதிர் வரிசையில் உள்ள ஒடுக்கப் பட்ட சமூகத்தைச் சேர்ந்த பெண்ணை கைது செய்வது என்பது கடைந்தெடுத்த பாசிசம்.

இந்த ரீல்ஸ் முதலமைச்சர், பா.ஜ.கவின் CARBON COPY ஆக செயல்படாமல், சகோதரி கார்த்திகாவை விடுவிக்கத் தேவையான நடவடிக்கையை செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் பதிவிட் டுள்ளார்.

அண்ணனாகவும் அரணாகவும் இருப்பேன் என்று வசனம் பேசியவரின் பதில் என்ன?

செஞ்சி சிறுமியை மீட்க த.வெ.க. அரசு உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும்!

துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. வலியுறுத்தல்!

சென்னை, அக்.22-

பெண்களுக்கு அண்ணனாக வும் அரணாகவும் இருப்பேன் என்று வசனம் பேசிய முதலமைச் சரின் பதில் என்ன என்றும், செஞ்சி சிறுமியை மீட்க உடனே நடவ டிக்கை எடுத்து, அது பற்றி அரசு உடனடியாக விளக்க வேண்டும் என்றும் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. அவர்கள் வலி யுறுத்தி உள்ளார்.

இது தொடர்பாக அவரது சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

பெருந்துறையில் காணாமல் போன செவிலியர், ஐந்து நாட்க ளுக்குப்பிறகுசடலமாகமீட்கப்பட்டு ள்ளார். அவரைக் காணவில்லை என்று புகாரளிக்கச் சென்றபோது, அந்தப் பெண்ணையே இழிவுப டுத்திப் பேசி, நடவடிக்கை எடுக்கா



மல் காவல்துறை அலட்சியமாகச் செயல்பட்டதாக உறவினர்கள் குற் றம்சாட்டுகின்றனர்.

மறுபுறம், செஞ்சியில் ஏழு வய துச் சிறுமி காணாமல் போய் ஒன் பது நாட்களாகியும், குழந்தை குறித்த எந்தத் தகவலும் கிடைக்கா ததால் பெற்றோர் செய்வதறியாது தவித்துக் கொண்டிருக்கின்றனர். ஒன்பது நாட்களாகியும் குழந்தை யைக்கண்டுபிடிக்கமுடியவில்லை என்றால், காவல்துறையை வைத் துக்கொண்டு முதலமைச்சர் என்ன செய்துகொண்டிருக்கிறார்?

பெண்களுக்கு அண்ணனாக வும் அரணாகவும் இருப்பேன் என்று வசனம் பேசிய முதலமைச் சர் @TVKVijayHQ அவர்கள், இந்த குற்றச்சம்பவங்களுக்கு என்ன பதில் சொல்லப் போகிறார்?

பெருந்துறை வழக்கில் குற்றச் சாட்டுக்குள்ளான அதிகாரிகளை விசாரணையிலிருந்து நீக்கி, நேர் மையான அதிகாரிகளைக் கொண்டு விசாரணை நடத்த வேண்டும். செஞ்சிச் சிறுமியை மீட்பதற்கான தேடுதலைத் தீவிரப்படுத்தி, எடுக் கப்பட்ட நடவடிக்கைகளை அரசு உடனடியாக விளக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பதிவிட் டுள்ளார்.

ஆர்.டி.சேகர் தலைமை! மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்க (தொ.மு.ச.) பொதுச் செயலாளர்

பெரம்பூர் த.ஆறுமுகம் இல்ல மணவிழா வரவேற்பு!

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துகிறார்!

சென்னை, அக். 22 –

மாநகர் போக்குவரத்து கழக ஊழியர் முன்னேற்றச் சங்க (தொ. மு.ச.) பொதுச் செயலாளர் – பெரம் பூர் 44வது வட்டக் கழகச் செயலாளர் பெரம்பூர் த.ஆறுமுகம் – ஆ.இராஜ லட்சுமி ஆகியோரின் புதல்வி ஆ.தமிழ் பொன்னிக்கும் சென்னை கோடம்பாக்கம் வி.குமார் – கே.ரமா தேவி ஆகியோரின் புதல்வர் கே. விக்னேஷ்க்கும் மணவிழா 25.10.2026 ஞாயிறு காலை 9 மணியளவில் மூலக்கடை ஜங்ஷ னில் அமைந்துள்ள ஸ்ரீ வள்ளி மகா லில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பு 24.10.2026 சனிக்கிழமை மாலை 6 மணியளவில் மூலக்கடை ஜங்ஷ னில் அமைந்துள்ள ஸ்ரீ வள்ளி



மகாலில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்புக்கு மாவட்டக் கழகச் செயலாளர் ஆர். டி.சேகர் தலைமை வகிக்கிறார்.

கலாநிதி வீராசாமி எம்.பி., மாத வரம் எஸ்.சுதர்சனம், தா.இளைய அருணா, பி.டி.சி. ஜி.செல்வராஜ், பி.டி.சி.வெ.பாலு, க.ஜெயராமன், அ.முருகன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இரா.நரேந்திரன், இரா.கருணா நிதி, எஸ்.ஆர்.கமலக்கண்ணன், வி.தயாளன், டி.கமலக்கண்ணன், அ.தமிழ்செல்வன், ப.மதிவாணன், வி.அமுலு, நா.சேகர் ஆகியோர் வர வேற்கின்றனர்.

இம்மணவிழா வரவேற்பில் கழக இளைஞர் அணிச் செயலாளர் – சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்.

கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., கே.என்.நேரு எம். எல்.ஏ., ஆ.இராசா எம்.பி., ஆர். எஸ்.பாரதி, டி.கே.எஸ்.இளங்கோ வன், அன்பகம் கலை, மா.சுப்பிர மணியன், பி.கே.சேகர்பாபு எம். எல்.ஏ., தங்கம் தென்னரசு எம். எல்.ஏ., தா.மோ.அன்பரசன், சா. சி.சிவசங்கர், ஆவடி சா.மு.நாசர், கோவி செழியன் எம்.எல்.ஏ., இரா. கிரிராஜன் எம்.பி., எஸ்.ஆஸ்டின் எம்.எல்.ஏ., ப.தாயகம் கவி, நே.சிற் றரசு, மயிலை த.வேலு, கனிமொழி என்.வி.என்.சோமு, புதுக்கோட்டை எம்.எம்.அப்துல்லா,

ஆர்.பத்மநாபன், புச்சி எஸ்.முரு கன், துறைமுகம் காஜா, பொன்.தன பால், ப.ரங்கநாதன், ஜே.ஜே.எபி னேசர், ஐட்ரீம் இரா.மூர்த்தி, இ.பரந்தாமன், கே.எஸ்.இரவிச்சந் திரன், ஜோசப் சாமுவேல், கே.பி. சங்கர், மேயர் பிரியா, துணை மேயர் சைதை மு.மகேஷ்குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன் னேற்றச் சங்க நிர்வாகிகள் இவ்வி ழாவில் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

திருவண்ணாமலை தெற்கு, வடக்கு

மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை!

திருவண்ணாமலை, அக்.22-

திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக்கூட்டம் நடைபெறவுள்ளது. செயற்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு, முன்னாள் அமைச்சரும், கழக கொறடாவுமான எ.வ. வேலு தீர்மானங்களை விளக்கி சிறப்புரையாற்றுகிறார்.

தலைமைக் கழக பிரதிநிதிகள் சி.வி.எம்.பி. எழிலரசன், டாக்டர் யாழினி ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இது குறித்து மாவட்ட தி.மு.க. அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு:-

24.10.2026 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு, திருவண்ணாமலை, திருக்கோயிலூர் ரோடு, சாரோனில் உள்ள மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில், திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது.

செயற்குழுக் கூட்டத்திற்கு தெற்கு மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன் தலைமை வகிக்கிறார்.

சட்டப்பேரவை முன்னாள் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, வடக்கு மாவட்ட அவைத் தலைவர் இரா.ராஜசேகர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

வடக்கு மாவட்ட செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன். எம்.பி., அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தில், மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், பகுதி, கிளைக் கழக மறுசீரமைப்பு பணிகள் குறித்தும், கழக ஆக்கப்பணிகள் குறித்தும் விவாதிக்கப்பட வுள்ளது.

மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு, முன்னாள் அமைச்சரும், கழக கொறடாவுமான எ.வ.வேலு அவர்கள் தீர்மானங்களை விளக்கி சிறப்புரை ஆற்றுகிறார்.

தலைமைக் கழக பிரதிநிதிகள் சி.வி.எம்.பி. எழிலரசன், டாக்டர் யாழினி ஆகியோர் கருத்துக்கள் வழங்கி உரையாற்றுகின்றனர்.

செயற்குழுக் கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், பகுதிக் கழக பொறுப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

வலைதளங்களில் வலம் வருவது!



முதல்வருக்கு உளவுத்துறை சொன்ன தகவல்..!

தமிழகத்தில் ஆளும் கட்சியைச் சேர்ந்த பல மாவட்டச் செயலாளர்கள், கட்சி நிர்வாகிகளின் பின்னணி குறித்து ஆராயாமல் பொறுப்புகளை வழங்கியிருக்கிறார்கள். இதனால் திருவள்ளூர் உள்ளிட்ட பல பகுதிகளில், நாகையில் நடந்ததைப் போன்ற பல விஷயங்கள் வெளிவர வாய்ப்பிருப்பதாகவும், இப்போதே முதல்வர் கவனம் செலுத்தவில்லை என்றால் மிகப் பெரிய பின்விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்றும் எச்சரிக்கை விடுத்திருக்கிறதாம். பல மாவட்டச் செயலாளர்களின் பதவி பறிபோனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்கிறார்கள்.

